வெளியீடு எண் 374 / 2022 நாள் 03.09.2022

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, திருவருட் பிரகாச வள்ளலாரின் முப்பெரும் விழா 52 வாரங்கள் முக்கிய நகரங்களில் சிறப்பாக நடத்தப்படும்.**

**மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தகவல்**

-----------

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இன்று (03.09.2022) இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அலுவலகத்தில் திருவருட் பிரகாச வள்ளலார் முப்பெரும் விழாவினை சிறப்பாக நடத்திட தமிழக அரசால் அமைக்கப்பட்ட சிறப்புக் குழுவின் கூட்டம் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

2022–2023 ஆம் ஆண்டுக்கான இந்து சமய அறநிலையத் துறை மானியக் கோரிக்கையின் அறிவிப்பில், "உயிர்த்திறள் ஒன்றெனக்கூறி தனிப்பெரும் கருணை ஆட்சி நடத்திய வள்ளல் பெருமானார் தருமசாலை துவக்கிய 156–வது ஆண்டு தொடக்கமும் (25.05.2022) வள்ளல் பெருமான் இவ்வுலகிற்கு வருவிக்க உற்ற 200–வது ஆண்டு தொடக்கமும் (05.10.2022) ஜோதி தரிசனம் காட்டுவித்த 152 வது ஆண்டும் (05.02.2023) வரவிருப்பதால் இம்மூன்று நிகழ்வுகளையும் இணைத்து அவரது 200–வது அவதார ஆண்டான அக்டோபர் 2022 முதல் அக்டோபர் 2023 வரை 52 வாரங்களுக்கு முக்கிய நகரங்களில் முப்பெரும் விழா எடுக்கப்படும் இதற்கென ஒரு சிறப்புக்குழு அமைக்கப்படும்" என அறிவிக்கப்பட்டது.

அதன்படி, தமிழக அரசு, திருவருட்பிரகாச வள்ளலாரின் முப்பெரும் விழாவினை சிறப்புற நடத்திடும் வகையில் டாக்டர் பி. கே. கிருஷ்ணராஜ் வானவராயர் அவர்கள் தலைமையில் 14 உறுப்பினர்களைக் கொண்ட சிறப்புக்குழு அமைக்கப்பட்டது.

இச்சிறப்புக் குழுவின் கூட்டம் இன்று மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வள்ளலாரின் முப்பெரும் விழாவினை அக்டோபர் 2022 முதல் அக்டோபர் 2023 வரை, 52 வாரங்களுக்கு முக்கிய நகரங்களில் சிறப்பாக நடத்திடும் வகையில் செயல் திட்டங்கள் வகுக்கப்பட்டன.

இக்கூட்டத்திற்கு பின் மாண்புமிகு அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய சீரிய வழிகாட்டுதலின்படி, தமிழக அரசால் வள்ளலார் முப்பெரும் விழாவினை சிறப்பாக கொண்டாடிட டாக்டர் பி. கே. கிருஷ்ணராஜ் வானவராயர் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட 14 பேர் கொண்ட சிறப்புக் குழுவின் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வள்ளலார் – 200 என்ற தலைப்பில் முப்பெரும் விழாவினை வருகின்ற அக்டோபர் மாதம் 5 ஆம் தேதி தொடங்கி அதற்கு அடுத்த ஆண்டு வரை அதாவது 52 வாரங்கள் வள்ளலாரின் பெருமையை பறைசாற்றுகின்ற வகையில் தமிழகம் முழுவதும் நிகழ்ச்சிகள் நடத்திட முடிவெடுக்கப்பட்டுள்ளது.

அதில் முக்கிய முடிவுகளாக வள்ளலார் முப்பெரும் விழாவிற்கான இலச்சினை (Logo) வெளியிடும் வகையில் அதில் இடம் பெறவேண்டிய அம்சங்கள் குறித்தும், வருகின்ற அக்டோபர் 5 ஆம் தேதி தொடங்க இருக்கின்ற முதல் நிகழ்ச்சியினை எங்கு நடத்தலாம் என்பது குறித்தும் ஆலோசித்து இருக்கின்றோம். அதேபோல முதல் 10 நிகழ்ச்சிகளில் வள்ளலாரின் சிறப்புக்களை சிறந்த முறையில் எடுத்துக் கூறுகின்ற, வள்ளலார் வழிகளை பின்பற்றுகின்ற சபையைச் சார்ந்தவர்கள், வள்ளலார் மீது பேரன்பு கொண்டவர்களை அழைத்து இந்த நிகழ்ச்சிகளை நடத்துவது என்றும், எந்தெந்த ஊர்களில் முதல் 10 நிகழ்வுகள் நடத்தலாம் என்றும் முடிவு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்கு எடுத்துச் சென்று அனுமதி பெற்று நிகழ்ச்சிகளை நடத்துவது என முடிவெடுக்கப்பட்டது.

வடலூரில் வள்ளலார் சர்வதேச மையம் அமைக்கப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தேர்தல் அறிக்கையிலே தெரிவித்து இருந்தார்கள். அதற்கான பணிகள் தொடங்கப்பட்டு தற்போது விரிவான வரைபடம் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது இது குறித்தும் விவாதிக்கப்பட்டது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு, வள்ளலாரின் பிறந்த நாளை தனிப் பெரும் கருணை தினம் என்று அறிவித்தார்கள். அதற்கு இந்த குழுவின் சார்பில் நன்றி தெரிவித்தும் ஒரு தீர்மானத்தை இயற்றியிருக் றார்கள். வள்ளலாரின் புகழுக்கு எல்லையே இல்லை. வடலூர் சன்மார்க்க ஆராய்ச்சிமையம் ஒன்றையும் தொடங்குவதற்காக அனுமதியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் பெற இருக்கின்றோம். வருகின்ற காலங்களில் வள்ளலார் உடைய புகழை இந்த அரசும், இந்து சமய அறநிலையத்துறையும், சிறப்பு குழுவும் தாங்கி, உயர்த்திப் பிடிக்கும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

தலைவர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்த திருக்கோயில்களில் அன்னை தமிழில் வழிபாடு திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் தளபதி அவர்கள் பொறுப்பேற்ற உடனேயே, மீண்டும் புத்துணர்வு பெறும் வகையில் முதுநிலை திருக்கோயில் என்று சொல்லப்படுகின்ற 48 திருக்கோயில்களில் முழுமையாக அன்னை தமிழில் வழிபாடு செய்திட ஆணையிட்டார்கள். அதனை செயல்படுத்தும் வகையில் அன்னைத் தமிழில் வழிபாடு குறித்த விளம்பரப் பலகைகள் திருக்கோயில்களில் வைக்கப்பட்டு, அதில் அன்னைத் தமிழில் அர்ச்சனை செய்யும் அர்ச்சகர்களின் பெயர் மற்றும் கைபேசி எண்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அன்னை தமிழில் வழிபாடு என்பது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதுடன் தொடங்கப்பட்ட நிகழ்வு, அன்னை தமிழில் போற்றிகள் இருக்க வேண்டும் என்பதற்காக 14 போற்றிப் புத்தகங்களை முதன் முறையாக வெளியிட்ட முதல்வர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள். அன்னை தமிழில் அர்ச்சனை செய்கின்ற அர்ச்சகர்களுக்கு பெறப்படுகின்ற அர்ச்சனை சீட்டின் தொகையில் 60% அந்த அர்ச்சகர்களுக்கே

வழங்குகின்ற நல்ல ஊக்கத்தொகை வசதியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ளார்கள் என்று தெரிவித்தார்கள்.

இக்கூட்டத்தில் குழுவின் தலைவர் டாக்டர் பி.கே. கிருஷ்ணராஜ் வானவராயர், கூடுதல் ஆணையர்கள் திரு. இரா. கண்ணன், இ.ஆ.ப., திருமதி ந. திருமகள், திருமதி எம். கவிதா, குழு உறுப்பினர்கள் திருமதி. சாரதா நம்பி ஆரூரன், திரு. அருள்நந்தி சிவம், திரு. கே.என். உமாபதி, திரு. உமாபதி, திருமதி. தேசமங்கையர்க்கரசி, திரு. மெய்யப்பன், முனைவர். உலகநாயகி, டாக்டர். சக்திவேல் முருகனார், திரு. என். இளங்கோ, திரு. எம்.கலைச்செல்வன், திரு. ஜி. சந்திரகாசு, கடலூர் இணை ஆணையர் திருமதி சி. ஜோதி, உதவி ஆணையர் ஆர். சந்திரன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : உதவி இயக்குநர் / மக்கள் தொடர்பு, இந்து சமய அறநிலையத்துறை, சென்னை – 34.